

அருப்புக்கோட்டையில் நகராட்சி 1வது வார்டுக்கு உட்பட்ட முனியப்பசாமி கோவில் தெருவில் 13 லட்சத்தில் கட்டப்பட்ட ரேசன் கடையை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், சேர்மன் சுப்புராஜ், நெசவாளர் அணி மாநில செயலாளர் பழனிச்சாமி, இளைஞர் அணி பாபுஜி, நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி ஆகியோர் இருந்தனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் நாங்குநேரி மேற்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆர்.யூ.சி. திருமண மண்டபத்தில் ஒன்றிய செயலாளர் ஆர்.எஸ். சுடலைக்கண்ணு தலைமையில் ஒன்றிய அவை தலைவர் சுப்பிரமணியன்,ஒன்றிய குழு துணை தலைவர் இசக்கிபாண்டி, மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் வாசுதேவன் பண்ணையார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.நிகழ்வில் ஜார்ஜ் கோசல்,சாந்தகுமாரி செல்லையா,புஷ்பபாண்டி,ஜான் ரபீந்தர்,வழக்கறிஞர் செல்வ சூடாமணி,லிங்கேசன்,ராஜ் என்ற வானுமாமலை உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### கால்நடைத் துறை சார்பில் ஆம்புலன்ஸ்கள் வழங்கல்!

# கால்நடையையும் மனிதநேயத்துடன் நடத்துகிறார் முதல்வர்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை, செப்.4-

சிவகங்கை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கால்நடை துறையின் சார்பில் கால்நடைக்கான 8 ஆம்புலன்ஸ்கள் அர்ப்பணிப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த எட்டு ஆம்புலன்ஸ்களை கொடியசைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார். அதனைத்தொடர்ந்து அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழகத்தில் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் மூன்று ஆண்டுகளாக நல்லாட்சி நடத்தி வருகிறார். அந்த நல்லாட்சியில் அனைத்துத் துறையினரும் பல்வேறு தரப்பட்ட மக்களும் பயன் அடைந்து வருகிறார்கள். ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சி பெற்று வருகிறது. மனிதநேயத்துடன்



மனிதர்களை போல் கால்நடைகளையும் ஒன்றாக முதல்வர் பாவித்து வருகிறார் என்பது இதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும் கூட்டுறவு சங்க தேர்தலில் உறுப்பினர்கள் சேர்க்கை குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஏற்கனவே பாராளுமன்றம், சட்டமன்றத்திற்கு, உள்ளாட்சிக்கு தேர்தல் ஆணையம் உள்ளது போல் கூட்டுறவு சங்க தேர்தலை நடத்திட தனியாக தேர்தல் ஆணையம் உள்ளது .அகில இந்திய அளவில் கூட்டுறவு சங்க உறுப்பினர் பணிகள் துவங்கியதும் தமிழகத்திலும் கூட்டுறவு தேர்தல் நடத்துவது குறித்த அறிவிப்புகள் வெளிவரும் . கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு தொழில்கள் துவங்கப்பட்டு முதலீடுகள் தமிழகத்திற்கு வந்துள்ளது. தற்போது அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் அவர்கள் பல்வேறு தொழில் புரிந்துணர்வுனர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சி யான செய்திஆகும். அதைவிட இதனால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது ஒரு மகிழ்ச்சி யான செய்தியாகும்.

இதில் மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் என்னவென்றால் முதல்வரை அமெரிக்காவில் வரவேற்றது நமது மாவட்டத்தை சார்ந்த முன்னாள் அமைச்சர் செ. மாதவனின் மகள் வெற்றிச் செல்வி தலைமையில் தமிழர்கள் அங்கு வரவேற்றது நமக்கு கூடுதலாக மகிழ்ச்சியை தந்து உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் கூறினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஆஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ மாவட்ட கழக துணை செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், நகர் மன்ற துணை தலைவர்எம். கார்கண்ணன் ஆகியோர் இருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் ராமச்சந்திரன், துணை இயக்குனர் மருத்துவர் முகமது கான், உதவி இயக்குனர்கள் மருத்துவர் ராம்குமார், மருத்துவர் பால கிருஷ்ணன் மருத்துவர் தங்கமுத்து மருத்துவர் ஜெயப்பிரகாஷ், மருத்துவர் ஜான் சுரேஷ் தாசன் மற்றும் துறை அலுவலர்கள் பல்வேறு அதிகாரிகள்.

ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், தொ.மு.ச.முருகேசன், ஒன்றிய துணைச்செயலாளர் முத்துகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து புதூர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### ஆர்.வினோத் காந்தி - வி.எல்.ஜோதி - கழகத்தினர் பங்கேற்பு!

# அரக்கோணம் நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### இராணிப்பேட்டை ஆர். காந்தி சிறப்புரை!

இராணிப்பேட்டை, செப்.4-

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகர திமுக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல்.ஜோதி மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம்,

என்.ராஜ்குமார், லட்சுமி பாரி, எ.கலாவதி , துரை சீனிவாசன், கோ.வ.தமிழ்வாணன், எ.அன்புலாரன்ஸ், நந்தாதேவி, ரமேஷ்பாபு, அரிகிருஷ்ணன், ஆர்.கே.லிங்கம், ரவிச்சந்திரன் தமீன் அன்சாரி பால கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் எம்.கே.சிவா எஸ். பிரசாத், வேதா சீனிவாஸ், பிஎல்டி.சிவா தொன் போஸ்கோ ஜி. ஜெனிஸ்குமார் டி.அந்தோணி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்டம் திருப்பரங்குன்றம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கியும், வருகிற ஒன்பதாம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பது மற்றும் கழக முப்பெரும் விழாவில் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், பகுதி செயலாளர் உசிலை எம்.சிவா தலைமையில் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் சுந்தர்ராஜன், சாமிவேல், இளங்குமரன், பரமேஷ் பாபு, மாரியப்பன், சிவலிங்கம், அன்பு மாணிக்கம், இளந்தென்றல், முத்துப்பாண்டி, இந்திரா காந்தி, மகாகணேசன், காசிமாயன், கவிஞர் ஜீவா, பி.ஆர்.செல்வேந்திரன், பாபுஜி, எம்.பி. சாரதி, ஜி.கே. கார்த்திக், செவனம்மாள் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்

### ப.கோவிந்தராசன் வரவேற்புரை!

# கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரை!

நாகை, செப். 4-

நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்வேளூர் சண்முகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக் கழக அவைத் தலைவர் தங்க.மனோகரன் தலைமை தாங்கினார். கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராசன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் சிறப்புரையாற்றினார்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் அ.வேதநாயகம், ரவிக்குமார், வெண்ணிலாபாபு,

பொருளாளர் பாரதி மோகன், மாவட்ட பிரதிநிதிகள் சி.வீரமணி, ஆர்.நடராஜன், ஷேக்முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் அங்காடிசேகர், மாவட்ட சுற்றுச் சூழல் அணி தலைவர் ஏ.எஸ்.என்.ராஜா, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வி.சாய்பாஷா, மாவட்ட மகளிர் அணி வலைதள பொறுப்பாளர் ஹேமலதா சரத்பாபு, மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தல் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி 40க்கு 40 வெற்றி கனிபறித்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்களுக்கு வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வது என்றும், நாகை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட இந்தியா கூட்டணியின் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வை.செல்வராஜ் வெற்றிக்கு உழைத்திட்ட கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், சட்டமன்ற தேர்தலில் 13 முறை நின்று வென்று 5 முறை தமிழ்நாடு முதலமைச்சராக பெறுப்பு ஏற்று தமிழக மக்களுக்கு பல்வேறு நல திட்டங்களை கொண்டு வந்து தமிழக மக்களின் வாழ்வை உயர செய்த முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கு கலைஞர் உருவம் பொறித்த, தமிழ் வெல்லும் என்ற வரிகளோடு நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசிற்கும், கோரி பெற்ற கழகத்தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது என்றும், கழகத்தலைவர்- தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியில் மகளிருக்கு ரூ. 1,000, மகளிருக்கு பேருந்தில் இலவச விடியல் பயணம், புதுமை பெண் திட்டம்,

நான் முதல்வன் திட்டம், தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், மக்களுகளுடன் முதல்வன் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாட்டிற்கு தந்து சிறப்பாக ஆட்சி செய்யும் தளபதி அவர்களின் ஆட்சி 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் என்ற இலக்கை எட்டிடும் வகையில் கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதியில் பெருவாரியான வாக்குகளை பெற்றிட கீழ்வேளூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும், கழக அரசின் திட்டங்களை, சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி கழகத்திற்கு வாக்குகளாக மாற்றிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




தேனி வடக்கு மாவட்டம் குச்சனூர் பேரூர் கழக சார்பில் குச்சனூர் பேரூர் செயலாளர் திலீப் குமார் ஏற்பாட்டில் பொது உறுப்பினர்கள் கூட்டம் குச்சனூர் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு வடக்கு மாவட்ட செயலாளர்தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார். உடன் கண்ணியம்பட்டி முருகேசன் மாவட்ட பிரதிநிதி சுருளி, பேரூர் அவைத்தலைவர் ரவீந்திரன், முன்னாள் சேர்மன் பிரபாகரன் மற்றும் பேரூர் பொறுப்பாளர்கள் பேரூர் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



நயினார்கோவில் மேற்கு ஒன்றிய கழக அவைத் தலைவர் வா.நாகநாதன் தலைமையில், கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன், முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ் சுந்தர்ராஜன்,முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப. த. திவாகரன்,துணைச் செயலாளர் அ. வாசு, மாரி முருகேசன், மனோகரன், புலிகேசவன், கோவிந்தன்,மற்றும் நயினார்கோவில் மேற்கு ஒன்றிய கழகத்தை சார்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் சார்பு அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கழக முன்னோடிகள், நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஒன்றிய கழகச் செயலாளர் சக்தி செய்திருந்தார்.